- -

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.29/2023**

பெயர்-திரு.ராஜ்குமார் நாள்.25.11.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) நான் B.L., படித்துள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து வாதிக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால், வாதியின் கணவர் கதிரேஷ்குமார் தாவா சொத்தை செட்டில்மெண்ட் மூலம் எழுதிகொடுத்தார். கதிரேஸ் குமாருக்கு அவரது தந்தையான பிரதிவாதி தங்கவேல் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்து பாத்தியப்பட்டது. பிரதிவாதி தங்கவேலுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், பிரதிவாதியும், அவரது தாயாரும் 1981-ல் செய்து கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் ஏ ஷெட்யூல் பிரதிவாதியின் தாயார் ரங்கம்மாளுக்கும், பி ஷெட்யூல் சொத்து பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது. 1981-முதல் தாவா சொத்து பிரதிவாதி தங்கவேலுக்கு பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. அவரது மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதித்தரும் வரை பிரதிவாதிக்கு பாத்தியம் இருந்தது. பிரதிவாதியின் மகனுக்கு 2018-ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார். செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கும் வரை, தாவா சொத்து பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதா என்றால், இல்லை. தாவா சொத்து கூட்டுக் குடும்ப சொத்து என்றால், சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் தற்போது வாதிதான் அனுபவத்தில் உள்ளார். தாவா சொத்தில் வாழை பயிர் செய்யப்பட்டுள்ளது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது மீண்டும் குறுக்குவிசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.25 04:34:59 +0530

District Munsif